## தேர்ந்து தெளிதல்

### செவிமடுத்தலில் இருந்து செயல்

பெரிய குழுவிற்கு திரும்புதல்

ஒவ்வொரு சிறிய குழுவும் தாங்கள் ‘‘நாம்’’ என்ற கண்ணோட்டத்தைப் பகிர்ந்துகொள்ளவும், தூய ஆவியார் எதற்கு அழைத்தார் என்று உணர்வதில் கவனம் செலுத்தவும் அழைத்தல். அதிசவாக, அன்றாட வாழ்க்கையில் ஹிஎளிய செயலைச் செய்ய’ வேரூன்ற உதவும் ஒரு வார்த்தையை அடையாளம் காணுதல்

எடுத்துக்காட்டு:

- தனிநபர்களாக அன்றாட வாழ்வில் நுகர்வு மற்றும் கழிவுகள் குறித்து அதிக கவனம் செலுத்துதல்
- குடும்பமாக, சுற்றுச்சூழலுக்கு ஏற்படும் தீமையைக் குறைக்கும் வகையில் ஒரு எளிய பழக்கத்தை பின்பற்றுதல்
- அதிச வாக திருஅவையில் அல்லது சுற்றுப்புறத்தில் ஒரு சிறிய சுற்றுச்சூழல் முயற்சிகளுக்கு ஆதரவு அளித்தல் மற்றும் அவர்களோடு உள்ள உறவை சரிசெய்ய முயற்சிப்பது.

## பரிந்துரை இறைவேண்டல்

வழிநடத்துனர் பங்கேற்பாளர்களை சுருக்கமான இறைவேண்டலைச் செய்ய அழைத்தல்.

எடுத்துக்காட்டு:

.......“ஆண்டவரே, எனக்கு உதவியருளும்.”

பதிலுரை: ஆண்டவரே எங்கள் மன்றாட்டை கேட்டருளும்.

நிறைவாக, ஆண்டவர் கற்றுத் தந்த இறைவேண்டல், தமதிரித்துவ புகம் (தந்தைக்கும் மகனுக்கும் தூய ...) மற்றும் அமைதியை ஒருவருக்கொருவர் பகிர்ந்துகொள்ளுங்கள்

## முடிவு பாடல்:

பொருத்தமான ஒரு பாடலைப் பாடலாம் அல்லது இசைக்கலாம்.



Published by:
Peninsular Malaysia Pastoral Team

Email:
api@archkl.org

INTERNAL CIRCULATION ONLY

மார்ச் 2026

# அதிசசிந்தனை

ஒன்றித்தப் பயணம் மற்றும் இறைவாக்கு உரைக்கும் திருஅவையை நோக்கி ஒன்றித்து நடத்தல்

மறைத்தூதுரைக்கும் சீடத்துவத்திற்கான மக்கள்

மாதாந்திர நோக்கம்:



## சூழலியல் : நமது பொது இல்லத்தை சீர்செய்தல்

நாம் அனைவரும் பூமி என்னும் ஒரே கோளத்தைப் பகிர்ந்துகொள்கிறோம். படைப்பு என்பது நம்மிடமிருந்து பிரிக்கப்பட்ட ஒன்று அல்ல. மாறாக நாம் ஒன்றாக வாழும் வீடு. நாம் எவ்வாறு வாழ்கிறோம், பயன்படுத்திக்கொள்கிறோம், படைப்போடு எவ்வாறு தொடர்புகொள்கிறோம் என்பது சுற்றுச்சூழலை மட்டுமல்ல, ஒருவரையொருவர் மற்றும் எதிர்கால சந்ததியினரையும் பாதிக்கிறது.

படைப்புகளைப் பராமரிப்பது நமது கிறிஸ்தவ அழைப்பின் ஒரு பகுதி என்று திருஅவை கற்பிக்கிறது. படைப்பு என்னும் கொடை நம்மிடம் ஒப்படைக்கப்பட்ட ஒன்று மாறாக நம்முடைய சுயநலத்திற்காக சுரண்டப்படும் ஒன்றல்ல. இதை நாம் மறந்துவிடும்போது, படைப்புகளோடும், மற்றவர்களுடனும் கடவுளுடனும் நமக்கிருக்கும் உறவுகள் சிதைந்துவிடுகின்றன.

சுற்றுச்சூழல் மாற்றம் எளிமையான வாழ்க்கை முறையை ஏற்றுக்கொள்வதன் மூலம் படைப்புகளுடனான நமது உறவைப் புதுப்பித்துக்கொள்ள நமக்கு அழைப்பு விடுக்கிறது. இது எல்லாவற்றையும் சரியாக செய்வது என்ற அர்த்தமல்ல. ஆனால் நமது அன்றாடத் தேர்வுகள் நமது பொதுவான இல்லத்திற்கு எவ்வாறு அக்கறை செலுத்துவது அல்லது தீங்கு விளைவிக்கின்றன என்பதைப் பற்றி மேலும் அறிந்துகொள்வது என்று பொருள்படுகிறது.

இந்த மாதம், நமது தனிப்பட்ட மற்றும் சமூக வாழ்க்கை முறைகள் எவ்வாறு பொறுப்பான நிர்வாகத்தை வெளிப்படுத்தமுடியும் மற்றும் படைப்புகளோடு நல்லிணக்கத்தை மீட்டெடுக்க உதவும் என்பதைப் பற்றி சிந்திக்கிறோம்.

# எதிர்கொள்வது

## தொடக்கப்பாடல்

பரிந்துரை: ஆண்டவரை நான் போற்றிடுவேன் என்றும்

## தொடக்கச் செபம்

படைப்பாளரான எங்கள் இறைவா,
நீர் பூமியை எங்களுடைய பராமரிப்பில் ஒப்படைத்துள்ளீர்
மேலும் நீர் படைத்த அனைத்தும் இணக்கத்தோடு வாழ எங்களை அழைத்திருக்கிறீர்.
படைப்புகள் அனைத்தையும் கொடையாகப் பார்க்க எங்கள் கண்களைத் திறந்தருளும்.
நன்றியோடும், பொறுப்புணர்வுடனும் மறுமொழிகொடுக்க எங்கள் இதயங்களைத் திறந்தருளும்.

எளிமையாக வாழவும், தேவையானதை மட்டும் கவனத்தோடுப் பயன்படுத்திடவும்,
எங்களின் பொது இல்லமான பூமியின் அழகை வரம்புகளோடு மதிக்கவும் எங்களுக்குக் கற்றுத்தாரும்.
எங்களுடைய விருப்பங்கள் உம்மீதும் ஒருவருக்கொருவர் மீதும், எதிர்கால சந்ததியினர் மீதும் உள்ள எங்களின் அன்பைப் பிரதிபலிப்பதாக.
இவையாவும் எங்கள் ஆண்டவராகிய கிறிஸ்து வழியாக உம்மை மன்றாடுகிறோம்.
ஆமென்.

## மேய்ப்புப்பணிப் பாதை

நமது பொதுவான இல்லத்தை மீட்டெடுப்பது, படைப்புகளுடனான நமது உறவைப் புதுப்பிப்பதில் இருந்து தொடங்குகிறது. சுற்றுசூழல் மாற்றம் என்பது இயற்கையைப் பாதுகாப்பது மட்டுமல்ல, நாம் வாழும் விதத்தையும் மாற்றுவதாகும். இது நமது நுகர்வு, கழிவுகள் மற்றும் வசதிக்கான பழக்கவழக்கங்களைப் பற்றி சிந்திக்க அழைக்கிறது.

எளிமையான வாழ்க்கை முறையை ஏற்றுக்கொள்வது என்பது பராமரிப்பாளரின் வெளிப்பாடாகும். எளிமை, உண்மையிலேயே தேவையானதை அடையாளம் காண உதவுகிறது. மற்றும் அதிகமானவற்றிலிருந்து நம்மை விடுவிக்கிறது. வளங்களைப் பொறுப்புடன் பயன்படுத்தவும், கழிவுகளை குறைக்கவும், படைப்பின் வளங்களை சலுகைகளாக எடுத்துக்கொள்ளாமல் பாராட்டிடவும் நம்மை அழைக்கிறது.

படைப்புகளுக்கு அக்கறை காட்டுவது நமக்கு பகிரப்பட்ட ஒரு பொறுப்பு. சிறிய ஆனால் நிலையான தேர்வுகள் மூலம் குடும்பங்கள், அதிசக்கள், மற்றும் திருஅவை சமூகங்கள் நமது பொதுஇல்லமான பூமியைக் குணப்படுத்த பங்களிக்கமுடியும். இந்த வழியில், சுற்றுச்சூழல் பராமரிப்பு அன்றாட வாழ்க்கையில் வாழும் நம்பிக்கையின் உறுதியான வெளிப்பாடாக மாறுகிறது.



# இறைவார்த்தை

## உரோமையர் 8:19-21

இம்மாட்சியுடன் கடவுளின் மக்கள் வெளிப்படுவதைக் காண்பதற்காகப் படைப்பே பேராவலோடுக் காத்திருக்கிறது. ஏனெனில் படைப்பு பயனற்ற நிலைக்கு உட்பட்டுள்ளது; தானே விரும்பியதால் அப்படி ஆகவில்லை. அதை உட்படுத்தினவரின் விருப்பத்தால் அவ்வாறு ஆயிற்று; எனினும் அது எதிர்நோக்கி இழந்த நிலையில் இல்லை.அது அழிவுக்கு அடிமைப்பட்டிருக்கும் நிலையிலிருந்து விடுவிக்கப்பட்டு, கடவுளின் பிள்ளைகளுக்குரிய பெருமையையும் விடுதலையையும் தானும் பெற்றுக்கொள்ளும் என்கிற எதிர்நோக்கோடு இருக்கிறது.

# உரையாடல்

## ஆவியில் கலந்துரையாடல்

ஆவியில் கலந்துரையாட கேள்விகள்.
நம்முடைய கலந்துரையாடல் –மேற்குறிப்பிட்ட இறைவார்த்தையோடும் படைப்புகளுக்கு அக்கறை காட்டுவதைப் பற்றியும் அமையவேண்டும். தொடர்ந்து நமது பொது இல்லமான பூமிக்கு எவ்வாறு நாம் அக்கறைகாட்டமுடியும்.

4–6 பேர் கொண்ட குழுவில் கீழ்க்கண்ட மூன்று சுற்றுகளில் பகிர்ந்துகொள்ளுங்கள். ஒவ்வொரு பகிர்வுக்குப் பிறகும் ஒரு நிமிடம் அமைதியில் இருப்போம்.

**சுற்று 1** "நான்" என்னும் கண்ணோட்டத்தில் (அமைதியில் தியானிக்க தயாராயிருங்கள். அனைவரும் பகிர்ந்துகொள்ளலாம், ஆனால் ஒவ்வொருவரும் 2 நிமிடத்திற்கு மேல் பகிரக்கூடாது. மற்றவருடைய பகிர்வையொட்டி எந்தக் கருத்தும் தெரிவிக்க வேண்டாம்)

- உங்களை மிகவும் கவர்ந்தது எது? எது உங்களுக்கு சவாலாக உள்ளது? எது உங்களை ஊக்கப்படுத்தியது?

(ஒவ்வொரு நபரின் பகிர்வுக்கும் நன்றி சொல்லியபின், ஒரு நிமிடம் அமைதி காத்தபின் அடுத்த நபர் பகிர்வைத் தொடங்கலாம்)

**சுற்று 2** "நீங்களும் நானும்" என்னும் கண்ணோட்டத்தில் (இப்போது குழுவில் மற்றவர் பகிர்ந்த கருத்துகளுக்குப் பதில் அளிக்க அழைப்பு – ஒவ்வொருவரும் ஒருமுறை மட்டுமே தங்களுடைய கருத்துகளைப் பகிர்ந்துகொள்ளலாம்.)

அனைவரின் கருத்துகளையும் செவிமடுத்தபின்:

- உங்களை மிகவும் கவர்ந்தது எது? எது உங்களுக்கு சவாலாக உள்ளது? எது உங்களை ஊக்கப்படுத்தியது?

(ஒவ்வொரு நபரின் பகிர்வுக்கும் நன்றி சொல்லியபின், ஒரு நிமிடம் அமைதி காத்தபின் அடுத்த நபர் பகிர்வைத் தொடங்கலாம்)

**சுற்று 3** – 'நாம்' என்னும் கண்ணோட்டத்தில்(இப்போது வழிநடத்துனர் அல்லது பொறுப்பாளர் அனைவரும் பகிர்ந்துகொண்டவற்றில் இருந்து பொதுவான கருத்தைத் தேர்ந்தெடுக்குமாறு அனைவரையும் அழைப்பார்)

- அனைவரின் கருத்தையும் செவிமடுத்தபின், தூய ஆவியார் நமக்குக் கூறுவது என்ன?

(ஒவ்வொரு நபரின் பகிர்வுக்கும் நன்றி சொல்லியபின், ஒரு நிமிடம் அமைதி காத்தபின் அடுத்த நபர் பகிர்வைத் தொடங்கலாம்)